# திருவள்ளுவர் காவியம் நவிலும் ஒழுக்க நெறிகள்

டாக்டர்.வே.விக்னேசு, தமிழ் உதவிப்பேராசிரியர்,
பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641014.

**Tiruvaḻḻuvar Kāviyam Navilum Oḻukka Neṟikaḷ**

Dr. V.Vignesh, Assistant Professor of Tamil, PSG College Of Arts And Science, Coimbatore-641014.

**Abstract:**
*Tiruvaḷḷuvar kāviyam is a unique Tamil poem of the twentieth century. It was composed by Coimbatore scholar A. Krishnasamy Naidu. The author's fictional kāviyam Thandiyalangaram also contains elements of kāviyam.The author has a deep commitment to Swarajya, democracy, Gandhi's non-violence, and Nehru's equality. Due to the author's boundless interest in Nehru's equality, he has created an egalitarian society without caste and religion in this kāviyam. In this way, the result of his attachment to Thiruvalluvar and Gandhiyannal, and the life principles emphasized by these great people, are woven throughout this poem. This article was written with the aim of identifying them.*

**ஆய்வுச்சுருக்கம் :**

இருபதாம் நூற்றாண்டு கண்ட தனித் தமிழ்க் காப்பியம் திருவள்ளுவர் காவியம். இதனை இயற்றியவர் கோயம்புத்தூர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் . ஆசிரியரின் கற்பனைக் காவியமான இதன் கண் தண்டியலங்காரம் நவிலும் காப்பிய உறுப்புக்கள் பொருந்தியுள. சுயராஜ்யம், மக்களாட்சி, காந்தியின் அகிம்சை, நேருவின் சமதருமம் ஆகிய வற்றில் ஆசிரியருக்கு ஆழமான ஈடுபாடு உண்டு. நேருவின் சமதருமத்தில் ஆசிரியருக்கிருந்த அளவிலா ஆர்வத்தினால் சாதி, சமயமற்ற சமதருமச்சமுதாயத்தை இக்காவியத்தில் படைத்துக் காட்டியுள்ளார். அவ்வகையில், திருவள்ளுவர், காந்தியண்ணல் ஆகியோர் மீது இவர் கொண்டிருந்த பற்றுதலின் விளைவு, அச்சான்றோர் பெருமக்கள் வலியுறுத்திய வாழ்வியல் ஒழுகலாறுகள் இக்காவியத்தினூடே பல்லாற்றானும் இழையோடுகின்றன. அவற்றை இனங்காட்டும் முகத்தான் எழுந்ததே இக்கட்டுரை.

**திறவுச்சொற்கள் :**திருவள்ளுவர், காப்பியம், அகிம்சை, காந்தி, சமதருமம், வாழ்வியல் ஒழுகலாறுகள், ஒழுக்கநெறிகள்

**தோற்றுவாய் :**

அ.கி.நாயுடு என்று தனியன்போடும் பெருமதிப்போடும் தமிழ்கூறும் நல்லுலகால் அழைக்கப்பெறும் கோயம்புத்தூர்பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் , திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு திருவள்ளுவர்காவியம்இயற்றியவர். தமிழர் சமுதாயம் , எல்லாச் சமுதாய அமைப்புகளுக்கும் முன்னையது ; தனிச்சிறப்புடையது என்பதைத் தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்என்னும் ஆராய்ச்சிப் பெருநூல் வழி நிறுவியவர். கவிச்சக்கரவர்த்திகம் பர்வரலாறு, கம்மவாரும் தென்னாடும், நால்வகைப்பாவும் பாவை நோன்புவரலாறும், திருபகவன்கீதை உண்மைப்பொருள், பூளைமேடுவரலாறு என்னும் நூல்களைப்படைத்தவர். இரதபந்தம் இயற்றுவதில் வல்லவர். உள்ளம் நினைப்பதை வெண்பாவால் வெளியிடும் ஆற்றல் பெற்றவர். இத்தகுசான்றோர் அரிதின் முயன்று இயற்றிய திருவள்ளுவர் காவியத்தில் வெளிப்படும் ஒழுக்க நெறிகள் குறித்த சிந்தனைகளைஎடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

**திருவள்ளுவர்காவியம் :**

அல்லனமறுத்துநல்லனஏற்றுத்தெளிந்தஉண்மைகளைஎழுதும்திறனும்உரனும்பெற்றிருந்தஅ.கி. நாயுடுஅவர்கள், 1940-ஆம்ஆண்டின்தொடக்கத்திலிருந்தே ‘காப்பியம்’ இயற்றவேண்டுமென்றவேணவாஇருந்துவந்தது. இவ்அவாவின்மேலீட்டால்உலகச்சான்றோர்திருவள்ளுவரைத்தலைவராகக்கொண்டுஅரும்பெருங்காப் பியமொன்றுஇயற்றலானார். பதினெட்டாண்டுகள்அரும்பாடுபட்டுகப்பியத்தைஇயற்றிமுடித்து, 1958-ஆம்ஆண்டில்கோயம்புத்தூர்பீளமேட்டில்அரங்கேற்றினார். இங்ஙனம்அரிதின்முயன்றுஇயற்றியகாப்பியமே ‘திருவள்ளுவர்காவியம்’ என்னும்பெயரினதாம்.

**காவியஅமைப்பு :**

திருவள்ளுவரைக்காப்பியத்தலைவராகக்கொண்டுஇயற்றப்பட்டதிருவள்ளுவர்காவியம் 5 காண்டங்களையும் 104 படலங்களையும் 4030 வெண்பாக்களையும்கொண்டது. காவியத்தொடக்கத்தில் 23 பாயிரச்செய்யுட்களையும்கொண்டது. கல்விக்காண்டம் 12 படலங்களையும் 215 செய்யுட்களையும்; யாத்திரைக்காண்டம் 84 படலங்களையும் 751 செய்யுட்களையும்; முப்பால்காண்டம் 18 படலங்களையும் 518 செய்யுட்களையும்; உரிமைக்காண்டம் 26 படலங்களையும் 988 செய்யுட்களையும்; அமைதிக்காண்டம் 25 படலங்களையும் 1449 செய்யுட்களையும்கொண்டுள்ளன.

இக்காவியத்திலுள்ளபாக்களனைத்தும்வெண்பாக்களால்இயன்றதாகும். வேண்டுழியெல்லாம்திருக்குறளைப்பொருத்திக்காட்டுதற்பொருட்டேவெண்பாக்களான்இக்காவியம்இய ற்றியதை,

**”பாவினத்தால்பாட்டியற்றும்பண்பிருந்தும்பாடரிய
தேவினித்தவெண்பாவில்செய்தனன்நூல் – காவியத்தில்
முப்பால்முழுக்குறளைஅங்ஙனேவைத்தற்காம்
அப்பால்கருத்தமைதிஆய்த்து”**

- (திருவள்ளுவர்காவியம். பாயிரம். பா.22)

என்னும்பாயிரச்செய்யுளான்இந்நூலாசிரியர்இயம்புகின்றார்.

**ஒழுக்கநெறிகள் :**

திருவள்ளுவர்காவியத்தில் காணப்படும் ஒழுக்கநெறிகளாகச்சூதாடாமை ,கள்ளுண்ணாமை, கொல்லாமை, கள்ளாமை குறித்து ஆசிரியர்பண்டிதர்அ .கி. நாயுடுஅவர்கள் கூறும் கருத்துக்கள்அமைகின்றன.

**சூது :**

திருவள்ளுவர் காவியத்தில் , சூது தோன்றிய விதம் , சூதாடும் இடங்கள் ஆகியவற்றைக்கூறும் ஆசிரியர், சூதாடுவதால்விளையும் தீமைகளைக் கூறுங்கால்பெரும்பாலும் திருக்குறள் கருத்துக்களையே கூறுவதுடன், சூது என்னும் அதிகாரத்திலுள்ள ஐந்து குறட்பாக்களையும் எடுத்துக்காட்டுகின்றார்.

**சூதாடுபவர் :**

சூதாடுபவரைக் குறிக்கத் திருவள்ளுவர் **"ஒன்றெய்திநூறிழக்கும்சூதர்"**(குறள்.932) என்றனர். திருவள்ளுவர் காவியஆசிரியர்சூதாடுபவரை **"ஒன்றெய்தி நூறிழப்பார்** "(தி.கா.4;11) என்கிறார். ஒன்றெய்தி நூறிழப்போர் ,என்பதற்கு **"ஒருபொருள் பெற்றுநூறுமடங்கு பொருளை இழந்துவிடுவோர்"**(திருக்குறள்தெளிவுரை, குறள்) எனப்பொருளுரைப்பர்மு .வரதராசனார்.


© 2025, IRJTSR

ஆயின்,இக்காவிய ஆசிரியர் **"சூதாடுபவர் மானம் , குலம், கல்வி, வண்மை முதலான நூறும் சூதாடுவதால் இழப்பர். சூதர் என்ற இழிபெயர் ஒன்றே அடைவர்"** (தி.கா.4:11:8) என்றனர்.

**சூதுதோன்றியவிதம் :**

திருவள்ளுவர்காவியஆசிரியர்சூதுதோன்றியவிதத்தினைக்கூறுங்கால்,போரில்லாத காலத்தில் , போர்வீரர்கள்,பொழுதுபோக்கிற்காகச் சேவல்போர் , ஆட்டுப்போர் வைத்து மகிழ்ந்தனர். இதிலிருந்தே சூது தோன்றியது என்கின்றார். பின்னர் , வேலையில்லாது சோம்பியிருப்போர் , உண்ட உணவுசெரிப்பதற்காகச் சூதாடினர் என்று கூறும்ஆசிரியர் ,சூதாடும் இடங்களாகத் திண்ணை , இடைக்கழி நெடுமாத்தடி, மாடம் முதலியவற்றைக் குறிக்கிறார் (தி.கா.4:11:1-3) வெற்றியே பெற்றாலும் சூதாட்டம் வேண்டாம் என்ற கூறுமிடத்து,

> **"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூ உம்**
> **தூண்டிற் பொன்மீம் விழுங்கியற்று"** (குறள்:931)

என்னுங் குறளை எடுத்துக்காட்டுகின்றார்.

**சூதாட்டதால்விளையும்தீங்கு :**

முன்பு மன்னர்க்குச் சூதாடுதல் இயல்பாக இருந்தது என்று கூறும் ஆசிரியர் , மன்னர் சூதாடித் தீமை அடைந்தமைக்குப் பாண்டவரைச் சான்று காட்டுகின்றார்(தி.கா. 4:11:5)மன்னர் மனைகளில் மட்டுமன்றி விடுதிகளிலும் சூதாடுவர். சூது , உள்ள பொருளை அழித்துப் பொய்யை மேற்கொள்ளச் செய்து, அருளையும் கெடுத்துப் பலவகையிலும் துன்பமுற்று வருந்தச் செய்யும்என்பதனை,

> **"பொருள் கெடுத்தப்பொய் மேற்கொளீஇ அருள்கெடுத்து**
> **அல்லல் உழப்பிக்கும் சூது"** (குறள் :938)

என்னும்குறள்கொண்டுஎடுத்துரைக்கின்றார்.

அங்ஙனமே, சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால் , புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச் சேராமல் ஒதுங்கும். இதனை,

> **"உடை செல்வம்ஊண் ஒளிகல்வி என்றஐந்தும்**
> **அடையாவாம் ஆயம் கொள்ளின்"** (குறள் : 939)

என்பதனான்சுட்டி, சூதாடுபவர்,மானம்,குலம்,கல்வி, வண்மை முதலான நூறிணையும் இழந்துசூதர் என்றும் இழிபெயரை மட்டும் அடைவர் என்கிறார் (தி.கா. 4:11:6-8).மன்னராயினும், மாந்தராயினும் சூதாடுவதால் தீமையே விளையும் ; சூதாடிப் பொருள் சேர்க்கஇயலாது என்கிறார் . தவிர,எவ்வழியிலேனும் பொருள் ஈட்டவேண்டும் என்ற ஆசை மிகுதியால் சூதாடுபவர் , சூதாடிப் பொருள் என்றும் சேர்க்கஇயலாது ; பொருளை இழப்பதோடு , கேட்டினையும் அடைவர்(தி.கா.4:11;10) ஆகலின்,சிறுமை பல செய்துச் சீரழிக்கும் சூதை ஆடக்கூடாதென்று காவிய ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

**சூதாடுதலைத்தடுக்கும் முறை :**

திருவள்ளுவர் காவியத்தில் சூது தோன்றிய விதம் , பின்னர் அது மாறியவிதம் , சூதாடும் இடங்கள், சூதாடுவதால் விளையும் தீயவிளைவுகள் ஆகியவற்றைஎடுத்துரைத்தஆசிரியர் , கலைக்கூடங்களை ஏற்படுத்திச் சூதாடுபவரின் உள்ளங்களைக் கலைகளில் ஈடுபடுமாறுசெய்வதே. சூதாடுவரை மீட்கும் வழியாகும் (தி.கா.4:11:15).என்பதனான், சூதாடுதலைத் தடுக்கும் வழி முறையையும் கூறுகின்றார்.


© 2025, IRJTSR

**கள்ளுண்ணாமை :**

கள்ளுண்ணுதல் மனிதனின் பழக்கமாகத் தொன்றுதொட்டே இருந்துவரினும், அதன் தீமையைச் சான்றோர்கள் அவ்வப்போது உணர்த்திவந்துள்ளனர்.

சங்க இலக்கியங்களில் கள்ளும் ஊனும்பாராட்டப்பட்ட நிலையினையே காணமுடிகின்றது. கள்ளுண்டு களிக்கும்விழா 'உண்டாட்டு' எனப்பட்டது. வீரர்கட்கு மன்னன் தன்கையாலேயே கள்வழங்கலையும் புறப்பாடலால் (புறம். 390) அறியமுடிகின்றது. கள்ளுண்டல் பாவச்செயல் என்ற கோட்பாடு அன்றில்லை. சமண , பௌத்த மதங்களில் செல்வாக்குப் பெருகிய காயத்தில் வள்ளுவர் , சாத்தனார் போன்ற பெரியோர்கள்ளைக் கடிந்து பேசினர்.

அங்ஙனமே, தமிழிலக்கியங்களில் கட்குடியின் இழிவு விளக்கப்படுகிறது. கள்ளின் தீமையை உணர்த்த 'உண்ணற்க கள்ளை' (குறள்: 932) என்கிறது வள்ளுவம்.'கள்உண்பான் கூறும் கருமப்பொருள் இன்னா' (இன்னாநாற்பது.33) என இன்னாநாற்பது இழித்துரைக்கிறது.சிலப்பதிகாரம் 'கள்ளுங்களவும்ஒழுமின்!' (வரந்தருகாதை,வரி,197)என்று அறிவுறுத்துகிறது.

கள்ளுண்ணாமையை ஐவகைச் சீலங்களில் ஒன்றாகப் பௌத்தசமயம் கூறுகின்றது . கள்ளுண்ணாமையை உயர் நோன்புகளுள் ஒன்றாகச் சமணமதம் சாற்றுகின்றது.

அண்னல்காந்தியடிகள் மதுவிலக்கை வலியுறுத்தியதுடன் , மதுவிலக்குத் திட்டத்தைச் செயல்படுத்தஅகிம்சை வழியில்போராடலாயினார் . மதுவிலக்கின் இன்றியமையாமையை விளக்கித் தாமே மதுவிலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டும் , பத்திரிகைகளில் எழுதியும் , பலரையும் அப்பணியில்ஈடுபடச்செய்தும், மதுவிலக்குத் தொண்டாற்றினார்.இவ்வகையில்கள்ளுண்ணலைக்காலந்தோறும்அறிஞர்கள்கடிந்துள்ளனர்.

**கள்ளுண்ணல்தோன்றியவிதம் :**

திருவள்ளுவர் காவியத்திலும்கள்ளுண்ணாமை வலியுறுத்தப்படுகின்றது. கள்ளுண்போர்- நஞ்சுண்போர் எனக் கூறப்படுகின்றது. கள்பழக்கம் தோன்றிய விதம் பற்றிக் கூறும்ஆசிரியர் , கள்ளின் கொடுமை, கள்ளுண்பவரின் போதைப் பேச்சுக்கள் முதலியவற்றைக் கூறியபின் குடிப்பழக்கத்தை ஒழிப்பதற்கான வழிவகையைக் கூறுகின்றார். குடிப்பழக்கம் உள்ளவருக்கு மன அமைதிப்பயிற்சி அளிக்கவேண்டும் என்கின்றார்.

காவிய ஆசிரியர் , கள்பழக்கம் தோன்றியவிதம் பற்றிக் கூறும்பொழுது , முன்பு, தென்னை, பனை மட்டுமன்றிப் பழமையான நெல்லை அவித்து ஊற்றுகின்ற சாற்றையும் காப்பியைப் போலக் குடித்து வந்தனர். இவற்றைக் குடிக்கும்பொழுது கிளர்ச்சியுண்டாகும். பாவலர் உள்ளத்தில் கிளர்ச்சி ஏற்பட்டுப் பாட்டுப்பாட அவர்களுக்குக் கள் ஈந்துக் காவலரும் குடித்தனர் , உறவினர் வந்தாலும் கள் குடித்து உபசரிப்பர் என்றுரைத்துஅறிவால் விலக்கக்கூடிய குடிப்பழக்கம் அறிவை மறைத்தது என்கின்றார் (தி.கா.4:9:2-4).

**கள்ளுண்ணலின் கொடுமை :**

திருவள்ளுவர் காவியத்தில் , கள்ளின் கொடுமையைஎடுத்தியம்பும்ஆசிரியர் , கள்ளுண்பதால்ஏற்படும் இழப்பு , தன்னுணர்வற்ற நிலை ஆகியனவற்றையும்குறிப்பிடுகின்றார் . கள்ளுண்டு மயங்கித் திரிபவர் , மானம்,மதி மட்டுமன்றி மக்கட்கான செல்வத்தையும் இழந்திடுவர் (தி.கா.4;9;6). கள்ளுண்பவர்கள்இக்காவியத்தில்பொன்னை,புதுமணப்பெண்டிரை, பெரும்போகவாழ்வைத் துறந்தவர்களைக் காட்டிலும் இழிந்தவராகக் காட்டப்படுகின்றனர். பொன் , பெண்டிர், போகவாழ்வு ஆகியவற்றைத் துறந்தவர்கள் தம் மெய்யைத் துறந்திலர். ஆயின் , கள்ளுண்போர்மானம், மதி, செல்வம் மட்டுமன்றித் தம்மெய்யையும் துறந்திடுவர்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

கள்ளுண்போர், தாயென்றோசேயென்றோநோக்கார்.தனக்கு நோய் வந்துரும் எனவும்எண்ணார். கண்ணொன்று காண ,வாயொன்று பேசச் , செயலொன்று செய்வர். அவர்கள் கண்ணிருந்தும் காணாமல், வாயிருந்தும் பேசாமல், காதிருந்தும் கேளாமல் மனமிருந்தும் எண்ணாமல் , சாலையோரங்களில் பிருமம் போலக் கிடப்பர் எனக் கள்ளுண்போரின் தன்னுணர்வற்ற செயல்களை ஆசிரியர் குறிக்கின்றார் (தி.கா. 4:9:9, 10). கள்ளுண்போரின் போதைப் பேச்சுக்களைச்சாதி , சமயம், செல்வம், பதவி ஆகியவற்றில் மயக்குற்றிருப்பவரின் போதைப்பேச்சுடன் ஒப்புமை உடையனவாகக் கூறுகின்றார் (தி.கா . 4;9;15). நாய்வாலை நிமிர்த்தல் , நரிவாய் அடக்குதல் , பேய்வாய் நிரப்பல் ஆகியவைகூடஇயலும். ஆயின், கள்ளுண்டுமயங்கினவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல் என்பது இயலாததாம் என்பதற்குக்,

**"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
**குளித்தானைத் தீத்துரீஇ யற்று"**

(குறள்: 929)

என்னும் குறளைக் காட்டுகின்றார் (தி.கா.4:9:12).

**கள்ளுண்ணலைத்தடுக்கும்வழி :**

கள்ளுண்ணலால்விளையும்கொடுமைகளைஎடுத்துரைத்தஆசிரியர் கள்ளுண்பதைப் போக்குவதற்கான வழிமுறைகளையும்சுட்டுகின்றார். மன்னனாட்சி நீங்கிக் குடியாட்சி தோன்றும்பொழுது மக்கள் உள்ளத்தில்தன்னடக்கம் தோன்றும். தவிர ,குடியாட்சியினால் நற்பண்பு , நற்சூழல் உண்டாகும்பொழுதுகள்ளுண்ணும் பழக்கம் நீங்கும். அவ்வாறில்லாமல் கட்குடியை நீக்கல் அரிது என்கிறார் (தி.கா . 4;9;23). கள் குடிப்பவரைத் தனியே வைத்து மனஅமைதிப் பயிற்சியளித்தால் அவர்களால் கட்குடியை மறக்கமுடியும் என்பதும் ஆசிரியர் கருத்தாகும்(தி.கா.4;9;24).

**கொல்லாமை :**

கொல்லாமைக்கோட்பாட்டினைத்தமிழிலக்கியங்கள்பல்லாற்றானும்வலியுறுத்துகின்றன. செயலாலும் சொல்லாலும், எண்ணத்தாலும் கொல்லாமையை வற்புறுத்துகிறது பௌத்தம் . சமணரின் நோன்புகளுள் ஒன்று அகிம்சை. இன்னா செய்யாமை , அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் இந்நான்கும் ஒன்றாகச் சேர்ந்ததே அகிம்சை. ஓரறிவு உயிர் முதலாக , ஐயறிவு உயிர் ஈறாக அவை சிறியனவாயினும்பெரியனவாயினும் அவற்றைக் கொல்லமாட்டேன்; கொல்லச் சொல்லவும் மாட்டேன்; மற்றவர் கொல்வதற்கும் மனம் , மொழி, மெய்களால் உடன்படவும் மாட்டேன் என்று உறுதி எடுத்துச் சமணமுனிவர் அகிம்சா விரதத்தை மேற்கொள்கின்றனர் . திருக்குறளும் பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாமை தவம்என்கின்றது.

**"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு"**(குறள்; 271)

காந்தியடிகள்மெய்யாலும்மனத்தாலும் எந்த உயிர்க்கும் தீமை செய்வதில்லை என்பதையே அகிம்சையின் பொருளாகக் கூறுகின்றார். அன்பு இருக்குமிடத்தில் வாழ்வுஇருக்கும், துவேஷம் கூடாது. அது அழிவில்கொண்டு விடும் என்பது அவரது போதனை.

**திருவள்ளுவர் காவியத்தில்'கொல்லாமை' :**

திருவள்ளுவர் காவியத்தில்காவியத்தலைவர் வள்ளுவனார்உலகஞானம் பெறயாத்திரைசெல்லும்போது, காசியில் ஆரியர் செய்யும் வேள்வியில் ஆக்களைப் பலியிடுவதைக்காண்கின்றார். அவ்வேள்வியைத் தடுத்துநிறுத்திக் கொல்லாமையையும் வேள்வியையும் பற்றி அவர்களுக்கு உணர்த்துமிடங்களில் கொல்லாமை குறித்துக்காவியஆசிரியரின் கருத்துக்கள் அறியலாகின்றன. தவிர , உரோம் நகரில் வணிகப்பெருமக்களால்காவியத்தலைவர் வள்ளுவனார்க்கு

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

அளிக்கப்பட்ட விருந்தில் புலால், கள் ஆகியன இடம்பெற்றன. வள்ளுவனார் இவற்றை மறுத்துரைக்கும் இடங்களிலும் கொல்லாமை , கள்ளுண்ணாமை பற்றியகருத்துக்கள் இடம்பெறுகின்றன. அங்ஙனமே , வேலன் வெறியாடலைத் தடுத்துநிறுத்திய இடத்திலும், கொல்லாமை வலியுறுத்தப்படுகின்றது.

வேதம் நவிலும்ஆவேள்வியை எண்ணி , வேள்வியில்ஆக்களைப் பலியிட்டதாகக் கூறும் ஆரியர்க்கு வேள்வியின் பண்பினைக் காவியத்தில் வள்ளுவர் விளக்குகிறார். இவ்விடங்களில் மனுதர்மம் உரைக்கும் நிலைக்கு மாறுபட்ட கருத்துக்களையே காணமுடிகின்றது.

**வேள்வியின் பண்பு:**

வேள்வியின் பண்பினைக் கூறுமிடத்துத் திருவள்ளுவர்காவிய ஆசிரியர் , இறைச்சியுணவை உண்பதற்காக மதிமயங்கிய நிலையே , ஆவை வதைத்து வேள்வியில் இட்டால் தேவருலகம் கிட்டும் என்பாருடைய வேள்விநிலை (தி.கா. 2;10:25). தவிர, உண்ணும் உணவையும் தன் உடம்பினுக்காக்காமல், உடம்பு இளைப்புற்றுத் தான் உண்ணும் உணவையும் அமிழ்தமாய் மற்றவர்க்கீயும் பசுக்களை அழிப்பது தேவர்களின்விருப்பமாயின் , அத்தேவர்கள் அரக்கரே ஆவர் என்கிறார் (தி.கா.2:10:27-30).

வேள்வியை வேதங்கள் சொன்னதாய் ஆக்களுக்குத் தீமைசெய்யவேண்டாம் என்ற வள்ளுவனார்,

**"அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர் செகுத்துண்ணாமை நன்று"** (குறள் :259)

என்ற குறளினை எடுத்துக்காட்டுகின்றார். (தி.கா.2:10:27)

**"இணைத்துணைத்துத் தென்ப தொன்றில்லைவிருந்தின்**
**துணைத் துணை வேள்விப்பயன்"**

என்ற குறளினைக் கூறிக் கைம்மாறு கருதாமல் , விருந்தோம்பலே தமிழர் வேள்வி என உணர்த்துகின்றார் (தி.கா.2:10:39). நெய் முதலிய பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலைவிட, ஒன்றன்உயிரைக் கொன்று , உடம்பைத் தின்னாதிருத்தலே நல்லது (குறள்: 259) என்ற திருவள்ளுவர் கருத்தே, திருவள்ளுவர் காவிய ஆசிரியர் கருத்தாகும்.

வேள்வியின் அவியுணவானது தேவரைச் சென்றடையும் என்பது தவறான கருத்தாகும் என்பது திருவள்ளுவர்காவியஆசிரியரின் முடிவு(தி.கா.2;10;44).

**அருளுடைமை :**

திருவள்ளுவர்காவியத்தில், உரோம் நகரில் வணிகர் வள்ளுவனார்க்கு விருந்தளிக்கின்றனர். அவ்விருந்தில் புலாலும், கள்ளும் இருந்ததைக் கண்ட வள்ளுவனார் அவற்றை ஒதுக்கிக் கொல்லாமை , புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை குறித்துக் கூறுவதாகப்படைக்கப்பட்டுள்ளது (தி.கா.2:20;5-7).

அங்ஙனமே, 'ஓர்உயிரைக் கொல்லாதிருத்தலே அருளுடைமை ' என்று கூறும் ஆசிரியர் , மக்களின் மாண்பு மிக்க அருளைப் போற்றுதலே உயர்ந்த பண்பாகும் என்கின்றார் (தி.கா. 2:20, 11). அன்பில் வளர்ந்து , ஆறறிவு உள்ள மாந்தர் , அன்பின்றி ஊன்தின்னல் ஆறறிவுடையோர் செயலாகாது என்று ஆசிரியர் முடிவுரைக்கின்றார் (2.20:13).

புலால், கள் முதலானவை உண்ணும் பழக்கம் உலகில் உள்ளதே. போருக்குக் காரணமாகும் இவை இல்லாவிடின் மாந்தர் அனைவரும் அமைதித் தேவராவர் என்பது காவியஆசிரியரின் துணிபாகும் (தி.கா.2;20:16). தவிர,'புலால் உண்பதால் உடல் நலத்துக்கும் கேடேயாகும். இதயத்துடிப்பு அதிகரித்து ஆயுள் குறையும் ' (தி.கா.2; 20;17) எனப் புலால் உண்பதால் விளையும் உடல் நலக்கேட்டினைக் கூறுகிறார்.

இயேசுநாதர், உயிர்க்கொலையை ஆதரிக்கவில்லை என்பது காவியஆசிரியர் கருத்தாகும். 'எல்லாப் படைப்பும் மனிதர்க்கே ' என்ற இயேசுநாதர் உரைக்குக்கருத்தாகும். உயிர்கொல்லல் என்பது பொருளன்று. அவற்றைக் கொல்லாது, அவற்றால் உண்டான பலனைப் பெறுவது என்பதாகும். அன்புப் பெருக்கினால் வெள்ளாட்டைஅனைத்துத்துன்பம்துடைத்தஇயேசுவைநன்கறிந்தோர்கொலைசெய்யமாட்டார்என்கிறார்காவியஆசிரியர்(தி.கா.2;20:21,22)

**தொகுப்புரை :**

- திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டமுதற்காப்பியம்திருவள்ளுவர்காவியமாகும்.
- திருவள்ளுவர்காவியத்தில் காணப்படும் ஒழுக்கநெறிகளாகச்சூதாடாமை , கள்ளுண்ணாமை, கொல்லாமை, கள்ளாமை குறித்து ஆசிரியர்பண்டிதர்அ .கி. நாயுடுஅவர்கள் கூறும் கருத்துக்கள்அமைகின்றன.
- மன்னராயினும், மாந்தராயினும் சூதாடுவதால் தீமையே விளையும் ; சூதாடிப் பொருள் சேர்க்கஇயலாது.
- எவ்வழியிலேனும் பொருள் ஈட்டவேண்டும் என்ற ஆசை மிகுதியால் சூதாடுபவர் , சூதாடிப் பொருள் என்றும் சேர்க்கஇயலாது; பொருளை இழப்பதோடு, கேட்டினையும் அடைவர்.
- கள்ளுண்டு மயங்கித் திரிபவர் , மானம்,மதி மட்டுமன்றி மக்கட்கான செல்வத்தையும் இழந்திடுவர்.
- கள் குடிப்பவரைத் தனியே வைத்து மனஅமைதிப் பயிற்சியளித்தால் அவர்களால் கட்குடியை மறக்கமுடியும்.
- வேள்வியின் அவியுணவானது தேவரைச் சென்றடையும் என்பது தவறான கருத்தாகும் என்பது திருவள்ளுவர்காவியஆசிரியரின் முடிவு.
- அன்பில் வளர்ந்து , ஆறறிவு உள்ள மாந்தர் , அன்பின்றி ஊன்தின்னல் ஆறறிவுடையோர் செயலாகாது.

என்பனஇக்கட்டுரையால்அறியலாகும்முடிவுகளாகும்.

**துணைநின்றநூல்கள்:**

[1] நாயுடு. அ.கி., - திருவள்ளுவர்காவியம்,ஆர்.என்.பிரஸ்,கோயம்புத்தூர்.1958.

[2] சாமிநாதய்யர். உ.வே.சா. (உ.ஆ.) – புறநானூறுமூலமும்உரையும், தியாகராசவிலாசவெளியீடு, சென்னை. 1956.

[3] சோமசுந்தரனார். பொ.வே. (உ.ஆ.) – சிலப்பதிகாரம்மூலமும்உரையும், சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம்,சென்னை. 1979.

[4] திரிகூடசுந்தரம் – பாபுஜிகாட்டும்பாதை, திருபாபுஜிபதிப்பகம், சென்னை1966

[5] மோஉறன்ராவ். ஸ்ரீ.யு.எஸ்., (தொ.ஆ.) - மகாத்மாகாபப்ளிகேஷன்டிவிஷன், தகவல்ஒலிபரப்புஅமைச்சகம், இந்தியசர்க்கார். 1970.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR